**கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் - 2023**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 4 கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய பங்களிப்புப் பணம் ரூபா 6,639,767 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டமையால் வருமானம் மற்றும் பெற வேண்டிய பங்களிப்புப் பணத்தின் பெறுமதி அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் போது திருத்தப்படும் என்பது. | சரியாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் தொடக்கம் முதல் வருமான வரி உரிய முறையில் செலுத்தல் அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமான வரிக்கு உட்படாத நிறுவனமா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும், மேற்படி உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும், மேற்படி உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்ளாது 2023 ஆம் ஆண்டு நிலையான வைப்பிற்கு கிடைத்த வட்டியிலிருந்து கழிக்கப்பட்டு நிறுத்தி வைத்தல் | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் கிடைக்கும் பதிலின் பிரகாரம் பெற வேண்டிய எஞ்சிய பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது | சரியான பெறுமதியை கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரி ரூபா 3,621,548 பெற வேண்டிய பணம் நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2023 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட சர்வதேச கூட்டுறவு தின நிகழ்வுக்காக செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 1,430,057 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் எதிர்கால திட்டவட்டமான உறுதிப்படுத்தலின் அடிப்படையில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அங்கீகாரம் பெற்று செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சரியாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | கூட்டுறவுச் சங்கக் கடன் | 32,783,930 | மீதி உறுதிப்படுத்தல் | கடனை மீளச் செலுத்தும் நடைமுறைகளின் கீழ் மாகாண ஆணையாளர்களின் ஊடாக அந்த நிலுவை உறுதிப்படுத்தல்கள் அவ்வப்போது பெறப்பட்டுள்ளன. | மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரிய உறுதிப்படுத்தல் காணப்படல் வேண்டும். |
| (ஆ) | தீர்க்கப்படாத முற்கடன் | 45,526 | மீதி உறுதிப்படுத்தல் | இது தொடர்பான தகவல்களை கண்டறிந்து பிரச்சினைகளின் அடிப்படையில் மீதி உறுதிப்படுத்தல்களை சமர்ப்பிக்க முடியாதிருந்தது. | -மேற்படி- |
| (இ) | மிகை நிதியத்தை மாற்றுதல் | 20,000 | மீதி உறுதிப்படுத்தல் | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | கடன் வழங்குதல் (ஊவா மாகாணம்) | 5,439,905 | மீதி உறுதிப்படுத்தல் | -மேற்படி- | -மேற்படி- |

## 1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1983 இன் 32 ஆம் இலக்க கூட்டுறவு சங்கங்கள் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டம் | | | |
| | (i) 43(அ) பிரிவு | 2024 பெப்ரவரி 20 ஆந் திகதியளவில் 23 சங்கங்களின் கணக்குகளை சமர்ப்பிப்பதிலான தாமதம் 2 வருடங்கள் 11 மாதங்கள் முதல் 04 மாதங்கள் வரையானதாக காணப்பட்டது. | 23 சங்கங்களிலிருந்து கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது. | சட்டத்தின் பிரகாரம் கணக்குகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) 43(ஆ) பகுதியின் 1,2,3 | 2023 ஆம் ஆண்டுக்காக 55 பதிவு செய்யப்பட்ட சங்கங்களிலிருந்து மற்றும் 16 சங்கங்களிலிருந்து 46 சங்கங்களில் 07 சங்கங்களினதும் பாதீடு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டு மதிப்பீட்டை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சட்டத்தின் பிரகாரம் பாதீட்டை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2022 நவம்பர் 25 ஆந் திகதிய 08/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுரைகளை கருத்திற்கொள்ளாது ஞாபகார்த்த விழாவிற்கு ரூபா 4,367,955 செலவிடப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் பாதீட்டின் அடிப்படையில் இந்த செலவினத்தை மேற்கொள்ள நேர்ந்துள்ளமை. | சுற்றறிகை அறிவுரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறுகள் ரூபா 259,555,617 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 79,412,313 ஆகும். அதன் பிரகாரம் நிதிப் பெறுபேறுகளில் ரூபா 180,143,304 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு பங்களிப்பு பண வருமானம் ரூபா 133,657,020 இனால் மற்றும் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 45,600,799 இனால் அதிகரித்தமையும் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) கூட்டுறவுச் சங்கக் கடன்** | | |
| (i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செயற்பாடற்ற 45 கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து பெற வேண்டிய ரூபா 30,461,782 | இந்த கடனை அறவிடுவதற்கு தொடர்ச்சியாக அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது | கடன் மீதிகளை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | தொகையும் செயற்பாடிலுள்ள இரண்டு சங்கங்களில் ரூபா 3,016,480 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 33,478,262 ஆன நிலுவைக் கடன் மீதி மற்றும் பெற வேண்டிய வட்டி ரூபா 8,608,138 தொகையில் மீளாய்வாண்டின் கடன் தவணையாக ரூபா 14,366 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அந்தக் கடன் மற்றும் வட்டிகளுக்கிடையே 12 வருடங்கள் முதல் 60 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து அறவிடப்படாத மீதியும் உள்ளதுடன் அதில் 15 சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 8,080,900 ஆன கடன் தொகையில் எந்தவொரு கடன் தவணைப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | என்பது. | வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட 1997 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 2,666,000 ஆன கூட்டுறவு பாடசாலைக் கடன், 2012 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,838,512 ஆன செயலாற்றல் முற்பணம் மற்றும் ரூபா 882,175 ஆன கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுறவு கல்லூரிக் கடன்கள் மற்றும் செயல்திறன் முன்பணங்கள் மற்றும் நீதிமன்ற இழப்பீடு மாதந்தோறும் வசூலிக்கப்படுவதை ஆராய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதியத்திலிருந்து வரையறுக்கப்பட்ட கொபேகனே கூட்டுறவு சேவைகள் சங்கத்திற்கு அரிசி பதப்படுத்தும் நிலையத்தை நவீனமயமாக்குவதற்கும் அரிசி உற்பத்திக்கான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கும் 2012 செப்தம்பர் 14 ஆந் திகதி ரூபா.3 மில்லியன் கடன் வழங்கப்பட்டது. அந்த கடன் உடன்படிக்கையில் அறவிடப்படாத கடன் மீதி ரூபா 2,983,090 ஆகும். அதற்குரிய வட்டி 2023 செப்தம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 3,231,662 ஆனமையால் மொத்த தொகை ரூபா 6,214,752 ஆக காணப்பட்டது. இந்த கடன் தொகையை மீள அறவிடும் சாத்தியம் தொடர்பில் சட்ட மா அதிபரிடம் வினவிய போது உடன்படிக்கையின் iii மற்றும் iv | எதிர்காலத்தில் இதுபோன்ற குறைபாடுகள் ஏற்படாமல் தடுக்க கடன் வழங்குவதில் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. | கடன் வழங்குவதை முறையாக செய்து கடனை வசூலிக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிபந்தனைகளின் பிரகாரம் உத்தரவாதக் காப்பீடு சாட்டப்பட்டால் நிலுவைக் கடன் தொகையை அதிலிருந்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிதியத்தினால் அவ்வாறு பிணைக் காப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய பண மீதி ரூபா 216,749,648 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 159,194,344 மற்றும் ரூபா 17,767,353 ஆக வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கல்விச் சேவைகள் பணியகத்திலிருந்து கூட்டுறவு நிதியத்திலிருந்து மற்றும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அரச சேவைகள் சணச என்ற சங்கம் இரண்டிலிருந்தும் அறவிட வேண்டி காணப்பட்டது. பெற வேண்டிய பங்களிப்புப் பண மீதியில் 82 சதவீதம் எனும் உயர் பெறுமதியை கொண்டிருந்தது. | கூட்டுறவு சங்கங்களில் இருந்து நிலுவைத் தொகையை வசூலிக்க சங்கங்களுக்கு அறிவூட்டுதல் சங்கங்களின் மேற்பார்வை அதிகாரிகளால் செய்யப்படும். | பெறவேண்டிய மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **சுழற்சி நிதியம்**<br>சுழற்சி நிதியத்திலிருந்து 2010 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 674.5 மில்லியன் கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. | | |
| (i) | நிதியத்தின் மாகாணக் கூட்டுறவுச் சங்கங்கள் 9 இற்காக ரூபா 306 மில்லியன் கடன் பணத்திலிருந்து தென் மற்றும் யே வட மத்திய மாகாணங்களில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் தவணைப் பணத்தில் ரூபா 9,626,500 தொகை கடன் தவணைகளிலிருந்து அறிக்கையின் திகதி வரையிலும் எந்தப் பணமும் கிடைத்திருக்கவில்லை. | தென் மாகாணத்தின் நிலுவையிலுள்ள கடன்களை செலுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், வடமத்திய மாகாணத்தின் கடன்களை மீளப்பெற சட்ட பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.. | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கூட்டுறவு நுகர்வோர் சங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன் பணத்தின் பெறுமதி ரூபா 191 மில்லியன் கடன் தொகையில் 2023 திசெம்பர் 31 வரையில் கிடைக்க வேண்டிய பணம் ரூபா 64 மில்லியன் ஆகும். அந்த கடன் உடன்படிக்கையின் படி கடன் பெற்று மாதமொன்றில் அல்லது இரண்டு மாதங்களுக்குள் அந்த கடன் தீர்க்க | கடனை அறவிடல் தொடர்பாக தொடர்ச்சியாக அறிவித்தல் மேற்கொள்ளப்பட்ட போதும் அந்த கடன் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது. | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டி இருந்தமை குறிப்பிடப்பட்ட போதும் 11 வருடங்கள் கடந்திருந்த போதும் அந்த கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | 2011 ஆம் ஆண்டின் போது கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு ரூபா 152.5 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருந்தது. அந்த கடன் தொகையில் 2012 ஆம் ஆண்டில் ரூபா 60 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 92.5 மில்லியன் ஆகும். | 2023.10.19 ஆந் திகதிய கடிதம் அனுப்பப்பட்டு துரிதமாக பணம் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளமை. | கடன் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |